# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102037

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் : [illegible] Year ஆண்டு: 2018 FIR No. மு.த.அ. எண்: 2/2018 Date நாள்: 06.02.2018

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period நேர அளவு : 05.02.2018 Time from : நேரம் முதல் : மாலை 6.00 மணியிலிருந்து Time to : நேரம் வரை இரவு 9.30 மணி வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.02.2018 Time : நேரம் 10.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.02.2018 Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written / Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   [illegible] தெற்கு சார் பதிவாளர் அலுவலகம் சாத்தூர், விருதுநகர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. இரா. சரவணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராமச்சந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1974 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி
   தனி வட்டாட்சியர் [illegible] அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திருமதி. பாரதி க/பெ. வெங்கட்ராமன், சார் பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.
   2. திரு. [illegible] [illegible]. இரவு காவலர், சார்பதிவாளர் அலுவலகம் சாத்தூர், விருதுநகர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   [illegible] தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுவது:

இன்று 06.02.2018 ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு காவல் நிலை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் R. ஸ்ரீனிவாச பெருமாள் ஆகிய நான் அரசு பணியாய் ... [illegible] ... திரு. இரா. சரவணன், தனி வட்டாட்சியர், ... அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் ... விருதுநகர் மாவட்டம் ... [illegible] ... [இணைக்கப்பட்டுள்ளது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. ஸ்ரீனிவாச பெருமாள் பதவி காவல் கண்காணிப்பாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 6/2/18 (signature) 6/2/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.02.2018.

Name: பெயர் R. ஸ்ரீனிவாச பெருமாள்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு, விருதுநகர்.

<u>விருதுநகர் ஊதக பிரிவின் குற்ற எண்.02/18 பிரிவு 13(2) r/w 13(1)(d) ன் தொடர்ச்சி:</u> ஆய்வு நாள்.05.02.2018 இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.இரா.சரவணன் (44/18), தனி வட்டாட்சியர் (ஆய்வுக்குழு அலுவலர்), குடிமைப் பொருள் வழங்கல், அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை. பெறுநர், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. நான் 05.02.2018ம் தேதி பிற்பகல் சுமார் 4.30 மணியளவில் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள குடிமைப்பொருள் வழங்கல் பிரிவில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அறிக்கை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதன்பேரில், நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அறிக்கை செய்தேன். விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி மேற்படி விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய இரண்டு அரசு சாட்சிகளான 1)திருமதி.க.கலைச்செல்வி (38/18), உதவியாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர், 2)திரு.இரா.ராமநாதன் (51/18), உதவியாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் ஆகியோர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுடன் 05.02.2018ஆம் தேதி மாலை 5.15 மணிக்கு புறப்பட்டுச்சென்று சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு 05.02.2018ஆம் தேதி மாலை 6.00 மணிமுதல் இரவு 9.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் திரு.முருகேசன் (50/18), த/பெ.சுப்பையா, இரவு காவலர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர் என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத பணம் ரூ.65,600/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் இணை ஆய்வுசோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன தொகை ரூ.65,600/-ஐ அவர், சார் பதிவாளரின் அருகில் கையில் கத்தையான பணத்தை சார் பதிவாளரிடம் கொடுக்க முற்பட்டுக்கொண்டிருந்தபோது ஆய்வுக் குழுவினர் வேகமாக நுழைவதைப் பார்த்தவுடன் மேற்படி கத்தையான பணத்தை தனது பேண்ட் பாக்கெட்டிற்குள் வைக்க முற்பட்டார். அவரை விசாரித்தபோது, அவர் அந்த பணமானது இந்த வாரம் எங்கள்

அலுவலகத்தில் பதிவு செய்த பத்திரங்களுக்கு லஞ்சமாக சார் பதிவாளர் அவர்கள் கூறியதன் அடிப்படையில் ஒவ்வொரு பத்திர பதிவு எழுத்தர்களிடமும் சென்று தனித்தனியாக வசூல் செய்து கொண்டுவந்த பணம் என்றும், அந்த பணத்தை சார் பதிவாளரிடம் கொடுக்க முற்படும்போதுதான் தாங்கள் வந்தீர்கள் என்று தெரிவித்தால் அந்த தொகை ரூ.65,600/- கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 05.02.2018ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 9.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம்:-1. ஆய்வு செய்த அலுவலகம் : சார் பதிவாளர் அலுவலகம், மெயின் ரோடு, சாத்தூர், 2. ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் :- 05.02.2018 ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணி, 3.ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர்: திரு.இரா.சரவணன் (44/18), தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல், அருப்புக்கோட்டை, 4.ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்கள் : 1) திரு.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர், 2) திரு.க.கலைச்செல்வி (38/18) உதவியாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர், 3) திரு.இரா.ராமநாதன் (51/18), உதவியாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர், 4) திருமதி.சுதா (32/18), இரண்டாம் நிலை காவலர் 1451, சாத்தூர் காவல் காவல் நிலையம், 5) திருமதி.பரமேஸ்வரி (33/18), இரண்டாம் நிலை காவலர் 1937, சாத்தூர் காவல் காவல் நிலையம், 5)ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள் : 1) திருமதி.பானுமதி (50/18), க/பெ.வெங்கட்ராமன், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 2)திரு.காளிதாஸ் (43/18), த/பெ.சண்முகம், இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 3) திரு.தாழை பாண்டியன் (37/18), த/பெ.பால்ராஜ், இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 4) திரு.மகாராஜன் (29/18), கேமரா ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 5) செல்வி. கிருபாசெல்வி (36/18), த/பெ.சுந்தரராஜன், கணிணி நிரலர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 6)திருமதி.ஜெயக்கொடி (35/18), த/பெ.சுப்பிரமணியன், அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர். 7)திரு.முருகேசன் (50/18), த/பெ.சுப்பையா, இரவு காவலர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர். கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 05.02.2018ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு காலம் 3 மற்றும் 4 கண்ட அலுவலர்கள் சகிதம் சாத்தூரில், மெயின் ரோட்டில் சாத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள

சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகம் கிழக்கு வாசல் கொண்ட காம்பவுண்டிற்குள், கிழக்கு வாசல் கொண்ட அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அலுவலகத்திற்குள் உள்ளே நுழைய அலுவலக உதவியாளரின் இருக்கையும், அதற்கு அடுத்தாற்போல் சார் பதிவாளர் இருக்கை மேடைமீது உள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே உள்ள பீரோக்களுக்கு வடக்கு பக்கம் இரண்டு இளநிலை உதவியாளர்களின் இருக்கைகளும், அதற்கு வடக்கு பக்கம் கணிணி அறையும், மேற்படி இளநிலை உதவியாளர்களின் இருக்கைக்கு எதிரே சார் பதிவாளரின் இருக்கைக்கு பின்புறம் வடக்குப்பக்கம் ஆவண அறையும் உள்ளது. மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தவுடன், காலம்-5 வரிசை எண்.1ல் கண்ட சார் பதிவாளரின் அருகில் கையில் கத்தையான பணத்தை சார் பதிவாளரிடம் கொடுக்க முற்பட்டுக்கொண்டிருந்த சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபர் ஆய்வுக் குழுவினர் வேகமாக நுழைவதைப் பார்த்தவுடன் மேற்படி கத்தையான பணத்தை தனது பேண்ட் பாக்கெட்டிற்குள் வைக்க முற்பட்டார். அப்போது அவரிடம் காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள், காலம்-4ல் கண்ட அரசு சாட்சிகள் திருமதி.கலைச்செல்வி, திரு.இராமநாதன் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும், சாத்தூர் நகர் காவல் நிலைய பெண் காவலர்களையும் அறிமுகம் செய்து, அவரை விசாரித்தபோது அவர் சாத்தூர் குருலிங்காபுரத்தைச் சேர்ந்த சுப்பையா மகன் திரு.முருகேசன் (காலம்-5ல் கண்ட வரிசை எண்.7 உள்ள நபர்) என்றும், Tamilnadu Ex.Serviceman Corporation மூலம் இரவு வாட்ச்மேனாக சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 5 வருடங்களாக பணிபுரிந்து வருபவர் என்றும் தெரிவித்தவரிடம் எந்த பணத்தை பேண்ட் பாக்கெட்டிற்குள் வைக்க முற்படுகிறீர்கள் என்று கேட்க, அவர் அந்த பணமானது இந்த வாரம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்த பத்திரங்களுக்கு லஞ்சமாக சார் பதிவாளர் அவர்கள் கூறியதன் அடிப்படையில் ஒவ்வொரு பத்திர பதிவு எழுத்தர்களிடமும் சென்று தனித்தனியாக வசூல் செய்து கொண்டுவந்த பணம் என்றும், அந்த பணத்தை சார் பதிவாளரிடம் கொடுக்க முற்படும்போதுதான் தாங்கள் வந்தீர்கள் என்று தெரிவித்து, அந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள், காலம்-4, வரிசை எண்.1ல் கண்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளருடன் காலம்-4, வரிசை எண்.2 மற்றும் 3 ஆகிய அரசு சாட்சிகள் திருமதி.கலைச்செல்வி, திரு.இராமநாதன் ஆகியோர்களைக் கொண்டு எண்ணிப்பார்க்க அதில்

ரூ.65,600/- இருந்தது. அந்த ரூ.65,600/- பணமானது இந்த வாரம் உங்கள் அலுவலகத்தில் பதிவு செய்த பத்திரங்களுக்கு லஞ்சமாக சார் பதிவாளராகிய நீங்கள் கூறியதன் அடிப்படையில் ஒவ்வொரு பத்திர பதிவு எழுத்தர்களிடமும் உங்கள் அலுவலகத்தில் இரவு காவலாளியாக பணிபுரியும் இந்த திரு.முருகேசன் என்பவர் தனித்தனியாக வசூல் செய்து கொண்டுவந்த பணம்தானா என்று சார் பதிவாளரிடம் கேட்க, அவர் எந்த பதிலும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி பணம் ரூ.65,600/-ஐ, ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள், காலம்-4, வரிசை எண்.2 மற்றும் 3 ஆகிய அரசு சாட்சிகள் திருமதி.கலைச்செல்வி, திரு.இராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினார். இரவு காவலாளி திரு.முருகேசன் என்பவரை விசாரித்து, அவர் கொடுத்த வாக்குமூலத்தை அரசு சாட்சிகள் காலம்-4, வரிசை எண்.2 மற்றும் 3 ஆகிய அரசு சாட்சிகள் திருமதி.கலைச்செல்வி, திரு.இராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள் பதிவு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து சார் பதிவாளரின் இருக்கையையும், அவரை காலம்-4, வரிசை எண்கள்.4, 5ல் கண்ட பெண் காவலர்களைக் கொண்டு தனி அறைக்குள் அழைத்துச் சென்று சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.190/- இருந்தது. அந்த பணம் ரூ.190/-ஐ சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து காலம்-5, வரிசை எண்.2 மற்றும் 3ல் கண்ட இளநிலை உதவியாளர்களான திரு.காளிதாஸ் மற்றும் திரு.தாழைப்பாண்டியன் ஆகியோர்களிடம் காலம்-4, வரிசை எண்.2 மற்றும் 3 ஆகிய அரசு சாட்சிகள் திருமதி.கலைச்செல்வி, திரு.இராமநாதன் ஆகியோர்கள் மற்றும் காலம்-4, வரிசை எண்.1ல் கண்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஆகியோர்களையும் காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்களையும், அவர்களது இருக்கைகளையும் சோதனை செய்ததில், திரு.காளிதாஸ் என்பவரிடம் ரூ.180/-ம், திரு.தாழைப்பாண்டி என்பவரிடம் ரூ.190/-ம் இருந்தது. அந்த பணத்தை சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்ததால் அவரவர் பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து காலம்-5 வரிசை எண்.6ல் கண்ட அலுவலக உதவியாளர் திருமதி.ஜெயக்கொடி அவர்களிடம் மேற்படி விபரத்தைச் சொல்லி காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டு அவரையும், அவரது இருக்கையையும் காலம்-4, வரிசை எண்கள்.4, 5ல் கண்ட பெண் காவலர்களைக் கொண்டு தனி அறைக்குள் அழைத்துச் சென்று சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.100/-ம் அவரது இருக்கைக்குள் இருந்த பணப்பெட்டியில் ரூ.49,970/-ம்

இருந்தது. அந்த பணம் ரூ.100/-ஐ சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பணப்பெட்டியில் இருந்த ரூ.49,970/-ஐ அவரிடமிருந்த 21.12.2017ஆம் தேதி முதல் பராமரிக்கப்பட்டு வந்த கணக்குப் புத்தகத்துடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப அந்த பணம் ரூ.49,970/-ஐ ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கணிணி அறையில் இருந்த காலம்-5 வரிசை எண்கள்.4 மற்றும் 5ல் கண்ட திரு.மகாராஜன், செல்வி.கிருபாசெல்வி ஆகியோர்களிடம் மேற்படி விபரத்தைச் சொல்லி காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்களையும், அவர்கள் இருந்த கணிணி அறையையும் சோதனை செய்ததில், அவர்களிடமோ, கணிணி அறையில் பணமோ, பொருளோ இல்லை. அதனைத் தொடர்ந்து பதிவு வைப்பறைக்குள் காலம்-3ல் கண்ட ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்கள், அரசு சாட்சிகள் மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோர்களுடன் சென்று சார் பதிவாளர் முன்னிலையில் சோதனை செய்ததில், பதிவு வைப்பறைக்குள் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 1)வருகைப் பதிவேடு, 2) தாமதவருகைப் பதிவேடு, 3)இயக்க பதிவேடு, 4)இரவுக் காவலர் வருகைப் பதிவேடு, 5)தனிநபர் பண இருப்பு பதிவேடு, 6)இரவுக் காவலர் பதிவேடு மற்றும் 7)கணக்குப்புத்தகம் ஆகியவற்றை சார் பதிவாளர் அவர்களிடமிருந்து ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்களால் கேட்டுப் பெறப்பட்டு கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக ஒரு திடீர் இணை ஆய்வு அறிக்கை மேற்படி சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக கணிணி அறையில் வைத்து மடிக்கணினியில் ஆய்வுக்குழு அலுவலர்/தாசில்தார் அவர்களின் மேற்பார்வையில் தட்டச்சு செய்து நகல் எடுக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று 05.02.2018ம் தேதி இரவு 9.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (05.02.2018) எனது தலைமையில் சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு நடத்தி கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் என்று சந்தேகப்படத்தக்க வகையில் ரூ.65,600/-ஐ திரு.முருகேசன் (50/18), த/பெ.சுப்பையா, இரவு காவலர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர் என்பவர் வைத்திருந்து திருமதி.பானுமதி (50/18), க/பெ.வெங்கட்ராமன், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர் என்பவருக்கு கொடுக்க முற்பட்டதாலும், அதற்கு சார் பதிவாளர் திருமதி.பானுமதி எந்த பதிலும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்து, மேற்படி ரூ.65,600/-க்கு தகுந்த முகாந்திரம் கூறாததாலும், மேற்படி இரவுக் காவலாளி திரு.முருகேசன் மற்றும் சார் பதிவாளர் திருமதி.பானுமதி ஆகிய இருவர்மீதும் வழக்கு பதிவு

செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய திடீர் இணை ஆய்வு அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று 06.02.2018ம் தேதி காலை 10.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (இரா.சரவணன்), தனி வட்டாட்சியர் (ஆய்வுக்குழு அலுவலர்), குடிமைப் பொருள் வழங்கல், அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை.

Received the complaint and registred case in Virudhunagar V &AC Crime No.02/18 u/s 13(2) r/w 13(1) (d) prevention of corruption act 1988 on 06.02.2018 at 10.00 am orginal first information report (Fir), complaint is submitted to the honourable Chief Judicial Magistrate cum Special Judge, Srivilliputhur. Copies submitted to the concerned Officers. (sd) R.Srinivasaperual, 06.02.18, DSP, (V&AC), Virudhunagar.

R. [signature] 6/2/18.
DSP V&AC.
(Virudhunagar)